# விஜய் கிண்டலடித்த 'மிசா ஹிஸ்டரி' இதுதான்..

# 1978இல் சட்டசபையில் கலைஞர் பேசியது!

நேற்றையத் தொடர்ச்சி

சௌக்கியமாய் இருக்கிறாயா என்று கேட்கலாம். ஆமாம், இருக்கிறேன் என்று சொல்லலாம். அடிப்பட்டாயாமே என்று நான் கேட்டதற்கு அதையெல்லாம் கேட்கக்கூடாது என்று என்னிடத்தில் சொல்லிவிட்டு, என் மகனிடத்தில் அந்தப் போலீஸ் அதிகாரி ஒரு பார்வையைத் திருப்ப, அவன் கண்கள் கலங்கி என்னிடத்தில் சொன்ன அந்தக் காட்சியினை நான் மறந்துவிடவில்லை.

அடிபடவில்லை என்றுதான் சொன்னான். ஆனால், ஆம் அடிபட்டோம் என்று அவன் சொல்லியிருப்பானேயானால் அன்று மாலையோ அல்லது அடுத்த நாள் காலையோ அவன் மட்டுமல்ல, சிறைச்சாலையில் இருந்த அரசியல் கைதிகள் அனைவரும் அதே கோர நிலையைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது என்பதை நான் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.




### மு.க.ஸ்டாலின் சிட்டிபாபுவின் நாட்குறிப்பு!

சிட்டிபாபுவினுடைய நாள்குறிப்புப் புத்தகம் பற்றி இங்கே பேசப்பட்டது. சிட்டிபாபு தான் மறைவதற்கு முன்பு இப்படியொரு நிலை வரும் என்று எதிர்பார்த்தா அந்த டைரியை எழுதினான்? சிட்டிபாபுவை நமக்கெல்லாம் தெரியாதா? எங்களைவிட நெருங்கிய நண்பன் அல்லவா சிட்டிபாபு.

இந்த சென்னையில் மேயராக வீற்றிருந்து அவன் ஆற்றிய பணிகள் மாற்றாரும் புகழ்கிற அளவிற்கு இருந்திடவில்லையா? நாடாளுமன்ற உறுப்பினராக நாடு மெச்சுகின்ற அளவுக்கு, பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்த போது சிட்டிபாபு அவர்களின் போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும் ஆளாகின்ற அளவிற்கு பணிகளை ஆற்றிடவில்லையா?

அவனுடைய டைரியையா நாம் சந்தேகிக்கிறோம்?



1977
மிசா கொடுமைக்குப் பின் சிறையிலிருந்து விடுதலை :
தலைவர், பேராசிரியர் மற்றும் கழக முன்னோடிகளுடன் முரசொலிமாறன், மு.க.ஸ்டாலின்.

அவன் எழுதிய நாட்குறிப்பையா நாம் சந்தேகிக்கிறோம்? அவன் எழுதிய எழுத்துக்களையா நாம் சந்தேகிக்கிறோம்? என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

இப்ப இஸ்மாயில் கமிஷன் வரும் என்று சிட்டிபாபு டைரி எழுதிய நேரத்தில் எண்ணியிருக்க முடியாது. அந்த விசாரணைக்கு இந்த டைரி சாட்சியாகச் செல்லும் என்று கூட சிட்டிபாபு எண்ணியிருக்க முடியாது. நடந்தவைகளை நடந்தவைகளாக எழுதிக் கொண்டு வந்த டைரிதான் சிட்டிபாபு எழுதிய அந்த நாள்குறிப்புப் புத்தகம்.

நீதிபதி இஸ்மாயில் அவர்களுக்கு கிடைத்த வலுவான சாட்சியங்களில் ஒன்றாக அது இருந்ததால் அந்த அடிப்படையிலும் வேறு பல சாட்சியங்களின் அடிப்படையிலும் தன்னுடைய அறிக்கையை நமக்குத் தந்திருக்கிறார். சிட்டிபாபுவின் நாட்குறிப்பின் பல்வேறு பகுதிகளை இந்த அறிக்கையிலே இஸ்மாயில் அவர்கள் சுட்டிக்காட்டி இருப்பதை ஒருமுறை இங்கே படிப்பதின் வாயிலாக இந்த அவையின் நடவடிக்கைக் குறிப்பில் அது பதிவாகுமேயானால் சிட்டிபாபுவுக்கு நான் செய்த கடமை அதைவிட வேறு ஒன்றும் இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன்.

அந்த வீரமறவனுக்கு என்னுடைய நண்பர், உறுப்பினர்



The Tribune

PRESIDENT DECLARES EMERGENCY

"Threat To Security From Internal Disorder"

676 Arrested All Over Country

PACT SIGNED FOR SALE OF IRON ORE TO IRAN

CMs Welcome Emergency Measure

Firm Action Taken To Save Nation's Integrity: P.M.

India Is Candidate For Security Council Seat

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கோவிந்தராசன் அவர்கள் பேசும்போது சிட்டிபாபுவினுடைய குடும்பத்திற்கு ஐந்து லட்சம் ரூபாய் நிதி தரவேண்டுமென்று சொன்னார்கள். அதுகூடத் தேவையில்லை. ஆனால், அவன் எழுதிய டைரி இந்த அவைக் குறிப்பில் ஏறுவது இருக்கிறதே அது அந்த மாவீரனுக்கு நாம் காட்டுகிற மரியாதை என்று சொன்னால் அது மிகையாகாது.

### அவன் எழுதுகிறான்:

"மாலை 5 மணி மீண்டும் உணவு களியுடன்கூடிய தட்டு, யாரோ பயன்படுத்திய தட்டுக்கள், யாரோ பயன்படுத்திய சிறுநீர் பானைகள், யாரிடம் கேட்பது, கேட்டால் பதில் யார் சொல்வது. இரவு 7.30 மணி. அறைக்குள்ளே இருட்டுத்தான். ஆயினும் வெளிவாசலில் ஓரிரு விளக்குகள். மங்கலான ஒளியில் எட்டு மணியளவில் சில உருவங்கள் வருவதைக் காண முடிந்தது. காரணம் நான் இருந்த இடம் வருவோரைப் போவோரைப் பார்க்கும் வகையில் அமைந்திருந்தது. காக்கி உடைகள், வெள்ளை உடைகள், சற்றேறக்குறைய இருபதுக்கும் மேற்பட்டோர். சிறை அதிகாரிகள் இருவர். கயூம் - அழகான பெயர். அன்பு என்ற சொல்லுக்கு அளித்திட்ட உருது சொல்தான் கயூம். ஆமாம், அந்த அன்புதான் அந்த அரசியல் கைதிகளை அடித்திட்ட ஆட்களுடன் அங்கே நின்றிருந்தார்."

"அவர் மட்டுமல்ல. அவர் கீழ் உள்ள அதிகாரிகள் உட்பட அவரது கையசைவில் அத்தனை பேரும் நாங்கள் இருக்கும் மண்டபத்திற்குள் நுழைந்தனர். எப்படி இரு கோடுகள் தனித்தனியே படுக்க வைத்தால் இருக்குமோ அப்படிப்பட்ட அமைப்பில் அவர்கள் நின்றிருந்தனர். அவர்களது கையிலிருந்த தடிகளை அவர்கள் நீட்டினால் ஏற்படும் அளவே இரு கோடுகளுக்கும் இடையேயுள்ள இடைவெளி. பட்டாளத்தின் வீரர்களைப்போல் அவர்கள் நின்றிருந்தனர்."

"திறக்கப்பட்ட கதவு பளீர் என்ற சத்தத்துடன் திறந்து கொண்டது. ஏதோ சினிமாவில் காணும் காட்சி போல் இருந்தது. கொலைகார கைதிகளின் கைத்தடிகள் அரசியல்வாதிகளின் உடலைச் சுவைத்துக் கொண்டிருந்தன. அலறல், அழுகுரல்கள், ஐயோ, அப்பா, அம்மா என்னும் அபயக் குரல்கள்."

"ஓடு உள்ளே என்ற உத்தரவு. சர்க்கஸ் புலி, ஆட்டுக்குட்டியின் தலையைத் தன் அகண்ட வாயில் வைத்துச் சுவைக்காமல் காண்போருக்கு வித்தை காட்டுவதுபோல், கணநேர அதிர்ச்சி. ஓடு என்றவுடன் தீ வளையத்தைத் தாண்டிச் செல்லும் சிங்கம் போல் கூண்டுக்குள் அடங்கியது."

"அறை நான்கு முடிந்து பூட்டும் போடப்படுகிறது. அடுத்து நாம்தான். பூட்டு திறக்கப்படும் சப்தம் கேட்டது. கதவைத் தள்ளினார்கள். 'வாங்கடா' என்ற குரல்."

"கதவு திறந்ததும் யார் முன்னே வெளியில் செல்வது என்ற காலம் கதவுகளை மூடப்போவதில்லை. அர்ச்சனைக்கு கொண்டு வந்த அரசியல் மலர்கள் அல்லவா நாங்கள். எனவே, திரும்பிப் பார்த்தேன். தீர்மானமாகவே முதலில் வெளியில் வந்தேன். பெயர் சொல்லி அழைத்தனர். எதிர்பார்த்த ஆள் அல்லவா நான். எனவே, ஓர் அடி எடுத்து வைப்பதற்குள் கன்னத்தில் வீழ்ந்த அறைகள் அடடா... நிலைக்கண்ணாடி கல் பட்டு உடைந்து விழுந்ததுபோல் எனக்குத் தோன்றியது."

"கண்கள் கணநேரம் காண்பது எல்லாம் காரிருள்போல் இருந்தது. இரு கோடுகளுக்கு இடையில் தள்ளப்பட்ட எலி. ஆம் அவர்கள் அடித்ததும் அப்படித்தான். அவர்கள் நினைத்தனர் இது எலி அல்ல, புலி என்று. காரணம் அத்தனை அடிக்கும் என் உடல் தரை நோக்கி விழவில்லை. தள்ளினார்கள் மதில் சுவர்மீது. சட்டென்று திரும்பிக் கொண்டேன். வயிற்றில் எட்டி உதைத்து விட்டான்."

"வீராசாமி நெடுமரமாக கீழே சாய்ந்து கிடந்தார். வெறிக்கூட்டம் முரசு பறை அறைவதுபோல் இரு கைகளால் அடி கொடுத்துக் கொண்டிருந்தது. ஒருபுறத்தில் இக்காட்சி. பள்ளிக்கூட மாணவன் பெஞ்சு மீது ஏறி நிற்பதுபோல் இரும்பு ஏணி அருகில் கன்னத்தில் கை வைத்துக்கொண்டு கதறும் வி.எஸ். கோவிந்தராசன். ஒரே குத்துத்தான் நீலநாராயணனுக்கு. குள்ள உருவம் அவருக்கு. மேலே நிமிர்ந்து பார்த்திட, மார்பகத்தில் மற்றொரு குத்து. முதுகில் இரண்டு தடி அடி. அவ்வளவுதான். குலை நோயில் கேவிக்கொண்டு கீழே விழும் நோயாளிபோல் சுருண்டு விழுவதைக் கண்டேன்."

"அருகே என் அன்புத் தம்பி. ஆமாம் ஸ்டாலின்தான். தமிழகத்து முன்னாள் முதலமைச்சரின் மகன் என்று நேற்றுவரை அறிந்த அந்த சுருளிராஜன், தன் கால் பூட்சால் அவன் அழகிய முகத்தைச் சுவைபார்க்க உதைத்தான். அடுத்து கொலைகாரன் ஒருவன் ஓங்கிய கோல் அவனது தோள்பட்டையில். காக்கி உடை அணிந்த வார்டர் ஒருவன் கன்னத்தில் கை நீட்டினான்."

"கண்டேன் காட்சியை. இவர்கள் அவனை அடித்தே கொன்று விடுவர் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. மற்றவர்கள்தான் மண்ணுடன் சாய்ந்து கிடப்பவர்களாக இருக்கின்றனர். உதவிக்கு எழ அவர்கள் முடியாதபடி அருகில் எமதூதர்கள். என்ன செய்வது? எனக்கென்று ஓர் துணிவு. திடீரென்று குறுக்கே பாய்ந்தேன். தம்பியைத் தள்ளிக்கொண்டே தடிகள் கழுத்தில். அவைகள் அடிகள் அல்ல. உலைக்களத்தில் பழுக்கக் காய்ச்சிய இரும்பைத் தட்டிப் பதப்படுத்தும் உளியாக மாறி விழும் சம்மட்டி அடிகளாக எனக்கு அமைந்தது. கழுத்தில் அத்தனையையும் தாங்கிக் கொண்டேன். அன்புத் தம்பி அறைக்குள்ளே ஓடிவிட வழி கிடைத்தது."

### ஆர்க்காடு வீராசாமி!

"வீராசாமியைத் தூக்கி நிறுத்தி ஒரு குத்துவிட்டு உள்ளே தள்ளினர். நீலநாராயணன் மூச்சுத் திணற, வி.எஸ். கோவிந்தராசனைத் தாங்கிப் பிடித்து அழைத்துச் சென்றார். தம்பியோ தான் பட்ட அடியை மறந்து, தன் உடன்பிறப்புக்களை அழைத்துச் செல்லும் காட்சி கண்டேன். அவர்களைப் படுக்க வைக்க, தன் தோள்துண்டை தரையில் போட்டு, தாக்கப்பட்டவர்களைத் தாங்கிப் படுக்கவைத்த காட்சி கண்டேன்."

"கொடிய காற்றில் நெடிய மரம் சாய்ந்து விழுவதுபோல் அறையில் நான் வீழ்ந்தேன். இல்லை, தள்ளப்பட்டேன். அறை முழுவதும் இருள் அல்லவா? நினைவு வேறு எனக்குப் பாதியாகத்தானே இருக்கிறது. பூட்டு பூட்டப்பட்டது. உள்ளே அழு குரல், முனகல், அப்பா, அம்மா என்ற ஒலி."

"அன்புத் தம்பியோ அருகில் வந்தான். அண்ணன் நீலத்தையும், கோவிந்தராசனையும் மார்பில் சாய்த்துவிட்டு, அவன் தன் பிஞ்சுக் கரங்களால் என் முகத்தைத் தடவிக் கொண்டே கேட்டான்: 'அண்ணே, இன்னும் உயிருடன் இருக்கிறாயா?' ஆமாம். அவன் கேட்டதில் நியாயம் இருக்கிறது. அடிக்க வந்தவர்கள் அல்லவே அவர்கள். கொலைவெறித் தாக்குதல் அல்லவா நடத்தினார்கள்."

"'அடி பலமா உனக்கு?' என்றேன். 'அதெல்லாம் இல்லை அண்ணே' என்று பெற்றவனைப்போல் பேசினான், தெம்பு குறையக்கூடாது என்பதற்காக. 'தம்பி, உன்னையும் அடித்தார்களா பாவிகள்?' என்றேன். 'இருக்கட்டும் அண்ணே' என்று சொல்லி அவன் என்னைத் தன் கரங்களால் அடிபட்ட இடங்களைத் தடவிக் கொடுத்துக்கொண்டே, என் கிழிந்த சட்டையைக் கழற்றிட உதவிபுரிந்தான்."

"முகத்தைத் துடைத்துக்கொண்டே, 'தம்பி தண்ணீர் தேவை' என்றேன். பாவம் அவன் என்ன செய்வான்? அறையில் இருந்தால்தானே தர. அதற்குள் அதட்டல் குரல்: 'யார்டா சிட்டிபாபு, வீராசாமி, நீலநாராயணன்; வாங்கடா வெளியே.'"

"பூட்டு திறக்கப்பட்டது. தம்பியைப் பார்த்தேன். அவன் போலும். பாவம் தண்ணீர் கேட்டதற்கு அவன் அப்பொழுது கண்ணீர் விட்டான். அந்தக் காட்சிகள் இதய இணைவுகள் அல்லவா?"

"அதிகாரிபோல் வந்தவர்கள் என்னை வீரமணி இருந்த அறை எண் எட்டில் தள்ளினார்கள். அதுபோல் நண்பர்கள் வீராசாமியையும், நீலநாராயணனையும் தனித்தனியே பூட்டியதைப்போல், ஸ்டாலினையும் தனியாக்கினர். அது பிரிவின் முதற்கட்டம்."

"அறை எட்டு. ஏற்கனவே அங்கு ஏழு பேர்; அத்தோடு நானும். அடிபட்ட வேகத்தில் விடுதலை ஆசிரியர் வீரமணிக்கு முகம் வீங்கிவிட்டது. ஏற்கனவே அறுவை சிகிச்சைக்கு ஆட்பட்ட விடுதலை சம்பந்தம் அடிபட்டபோது, அவரது அறுவை சிகிச்சையில் மீண்டும் அவதி. இதய நோயுடன் வேதனைப்படும் தியாகராஜன். இவர்களுடன் நீதிபதியின் மகன் சத்தியேந்திரன். அன்றியில் மேலும் மூவர். என்னுடன் சேர்த்து ஆக எட்டு. அறையும் எட்டு என்ற இலக்கத்தில்."

"'அடி பலமா?' என்று ஆசிரியர் வீரமணி கேட்டார். அழுவதைத் தவிர அவருக்கு என்ன பதில் என்னால் அப்போது தர முடியும்?"

"கழுத்து, வயிறு, தோள், கை, கால் இவைகள் போதாது என்று வீங்கிய உதடுகள். இத்தனையும் பார்த்தே அவர்கள் 'எப்படித் தாங்கினாய்?' என்றனர். என்ன செய்வது? என்னால் படுக்க, ஏன் நிற்க, நீட்டி உட்கார முடியாததால் சத்தியேந்திரன் தாங்கிப் பிடித்து சுவரில் சாய்த்து உட்கார வைத்தார். வழக்கறிஞர் அவர். அவரும் அடிபட்டவர்தானே."

"சிறுநீர் கழிக்க வேண்டும் என்று எண்ணினேன். நகர்ந்தே கம்பி அருகில் வந்தேன். சிறுநீர் வந்தால்தானே? வயிறு வெடித்திடும் போன்ற பிரமை. அப்பா, அம்மா என்ற முனகல்."

இது சிட்டிபாபுவின் டைரி. இறுதியாக சில மாதங்களில் சிட்டிபாபுவுக்கு நீண்ட அமைதியே வந்துவிட்டது.

மிசா கைதியாக இருந்தவர்கள் இந்தச் சட்டமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள்; இப்போதும் இருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்திருக்கிறார்கள்; இப்போதும் இருக்கிறார்கள். மேலவையின் உறுப்பினராக இருந்திருக்கிறார்கள்; இப்போதும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் எந்த வகையில் நடத்தப்பட்டார்கள்? எப்படிப்பட்ட கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார்கள்?

இவ்வளவுக்கும் யாரோ தனிப்பட்ட ஒருவர்தான் காரணம் என்று நான் கூறிட மாட்டேன். இங்கே பேசிய பல நண்பர்கள் எடுத்துக்காட்டியது போல் ஒன்றைச் செய்தார்கள். அதனுடைய பல்வேறு விளைவுகள் இந்த அளவுக்குக் கொண்டு வந்து விட்டன என்பதை யாரும் மறுத்து விட முடியாது.

நெருக்கடி நிலை என்ற அந்தக் கோரப் பிசாசு அவிழ்த்துவிடப்பட்ட காரணத்தால் இப்படிப்பட்ட கொடுமையான நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் நடக்கக் காரணமாய் இருந்தது என்பதை யாரும் மறுத்திட முடியாது.

### சாதி, மதம் கடந்த நிலை!

அரசு நெருக்கடி நிலை என்ற நிலையை வகுத்தது. அதைத் தொடர்ந்து தி.மு.க. மற்றும் உள்ள கட்சிகள் நெருக்கடி நிலை கூடாது என்ற நிலையை எடுத்தது. இது கொள்கை வேறுபாடு. கொள்கை மாறுபாடு அல்லது கொள்கை முரண்பாடு என்ற அளவில் முடிந்திருக்க வேண்டிய ஒன்றே அல்லாமல், சென்னை சிறைச்சாலையை மற்ற சிறைச்சாலை களுக்கெல்லாம் பூச்சாண்டி காட்டுகிற இடமாக, தமிழ்நாட்டில் இருக்கும் மக்களை எல்லாம் பீதி கொள்ளச் செய்கிற ஒரு நிலையமாக ஆக்கிக் கொள்ளவும், எங்கள் மீது போடப்பட்டிருக்கும் சர்க்காரியா கமிஷனுக்குக்கூட சாட்சிகளைக் கட்டாயப்படுத்தி தயாரிக்கின்ற இடமாகவும் ஆக்கிக் கொண்டார்கள் என்றால், அந்த அதிகாரிகள் யாராக இருந்தால் என்ன, எந்த மதத்தைச் சேர்ந்தவர், எந்த வகுப்பைச் சேர்ந்தவர், எந்த சாதியைச் சேர்ந்தவர், யாருக்கு வேண்டியவர்கள் என்பதல்ல முக்கியம்.

அதிகாரிகள் எந்த வகுப்பு, எந்த மதம், எந்த சாதி, யாருக்கு வேண்டியவர் என்று பார்த்தால் மாத்திரம் போதுமா? அடிப்பட்டவர்கள் யார்? அதிகாரியிலே ஒருவர் இன்ன இனத்தைச் சேர்ந்தவர் என்றால், அடிப்பட்ட சத்தியேந்திரன் எந்த இனத்தைச் சேர்ந்தவர்? அடிப்பட்ட முத்துராமலிங்கம் எந்த இனத்தைச் சேர்ந்தவர்? மறந்துவிட முடியுமா?

கயூம் என்ற அதிகாரி தவறு செய்தார் என்று இஸ்மாயில் என்ற நீதிபதி தீர்ப்பளிக்கவில்லையா? அறிக்கை தரவில்லையா? அப்படிப்பட்ட முடிவு எழுதவில்லையா? இதிலே சாதிகள், மதங்கள், வகுப்புகள் அனைத்தையும் கடந்த ஒரு நிலைமையைத்தான் நாம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



### பாளையங்கோட்டை சண்முகம்!

பாளையங்கோட்டை சண்முகத்தைப் பற்றி இங்கே நண்பர் கந்தசாமி பேசினார். இஸ்மாயில் கமிஷன் அறிக்கை மீது எடுத்துக்கொண்ட நேரத்தைவிட பாளையங்கோட்டை சண்முகத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்கு அவர் எடுத்துக்கொண்ட நேரம் அதிகம்.

பத்து ஆண்டுகாலத்திற்கு முன்பு, பாளையங்கோட்டை சண்முகம் கொண்டிருந்த கொள்கைக்கும், இன்றைக்கு உள்ள கொள்கைக்கும் உள்ள மாறுபாட்டைச் சொன்னார்கள். அரசியலில் நேற்றைக்கு ஒரு கொள்கை, இன்றைக்கு ஒரு கொள்கை என்று வெகு காலத்தில் கொள்கைகள் மாறிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், 10 ஆண்டு காலத்தில் ஒரு கொள்கை மாற்றம் பாளையங்கோட்டை சண்முகம் அவர்களுக்கு ஏற்பட்டது என்பதை—அதுவும் கந்தசாமி அவர்கள் சொல்லுகிற நேரத்தில் எனக்கு மிக மிக ஆச்சரியமாக இருந்தது.


எனவே, கொள்கை மாற்றங்கள் அல்ல நடவடிக்கை எடுக்க வேண்டியது இஸ்மாயில் கமிஷனின் அறிக்கைப்பார் யார் மீது என்று நாம் எண்ணிக் கொண்டிருக்கும் நேரத்தில், அவர் மக்களைத் தூண்டிவிடுகிறார் என்றால், "மக்கள் நடவடிக்கை எடுப்பார்கள்" என்று சொல்லுகிறார் என்றால், அரசு எவ்வழியோ; குடிகள் அவ்வழி.

"மக்கள் பார்த்துக்கொள்வார்கள்" என்பதற்கு என்ன நியாயம் கற்பிக்கப்படுகிறதோ, அதே நியாயந்தான் பாளையங்கோட்டை சண்முகம் சொல்கிற "மக்கள் நடவடிக்கை எடுப்பார்கள்" என்பதற்கும் நியாயம் கற்பிக்கப்பட வேண்டும்.

ஆகவே, "மக்கள் நடவடிக்கை எடுப்பார்கள்" என்றால், ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் அல்ல; வன்முறையில் அல்ல, அற முறையில், அன்பு முறையில், அரசுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய முறையில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை "மக்கள் எடுப்பார்கள்" என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பாளையங்கோட்டை சண்முகத்திற்கு ஏதோ ஒரு வகுப்பார் மீது துவேஷம் என்றெல்லாம் வெளியே பேசப்படுகிறது, பத்திரிகையில் செய்தி போடப்படுகிறது. துண்டு அறிக்கை வெளியிடப்படுகிறது. அவரே கூட்டங்களில் பேசியிருக்கிறார்; பேசுகிறார். செந்தாமரை என்ற அந்த அதிகாரியும் நீக்கப்பட வேண்டுமென்று பேசுகிறார்.

செந்தாமரைக்கும், பாளையங்கோட்டை சண்முகத்திற்கும் என்ன உறவு என்பதும், அவர்கள் இருவரும் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதும் நிதியமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இதிலே வகுப்பு பேதம் இல்லை. சாதி பேதம், மத பேதம் இல்லை.



### குற்றம்சாட்டப்பட்ட அதிகாரிகள் மீது உடனடி நடவடிக்கை!

மனிதனை மனிதனாக எண்ணாமல், மிருகங்களைப் போல் நடத்தி, மாக்களைப்போல் நடத்தி, மிருக ஆட்சியைச் சிறைச்சாலையில் புரிந்த, அதற்குத் துணை நின்றவர்கள்மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி நடைபெறுகிற விவாதம். அதிலே திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கருத்தை எடுத்து வைத்திருக்கிறது.

ஆகவே, இனியும் காலதாமதம் செய்யாமல், யார் யார், எந்த எந்த அதிகாரிகள் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்கள் மீது இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்; அதைத்தான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இந்த அரசு சிறைச்சாலைச் சம்பவங்களுக்குப் பொறுப்பு அல்ல என்றாலும், நடைபெற்றுவிட்ட சம்பவங்களுக்கு விசாரணை நடத்தி, அறிக்கை வைத்த பிறகு, அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், அந்தப் பொறுப்பும், பழியும் இந்த அரசின்மீது ஏற்பட்டு விடக்கூடும் என்பதை நான் எச்சரித்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

இவ்வாறு கலைஞர் பேசினார்.

நன்றி : "மின்னம்பலம்" இணையதளம்